கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று முன்தினம் (17.9.2023) வேலூர் மாநகர், பள்ளிகொண்டாவில் நடைபெற்ற திமுக முப்பெரும் விழாவில், தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணியின் சார்பில் "மக்களுடன் ஸ்டாலின் என்ற செயலியை கழக பொதுச் செயலாளரும், நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன் அவர்கள் தொடங்கி வைத்தார். இவ்விழாவில், கழகப் பொருளானரும், நாடாளுமன்ற குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு, கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சருமான கே.என். நேரு, துணை பொதுச் செயலாளர்கள் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆ.ராசா, அந்தியூர் செல்வராஜ், கழக தகவல் தொழில்நுட்ப அணியின் செயலாளரும் தொழில் துறை அமைச்சருமான டி.ஆர்.பி.ராஜா, அமைச்சர் பெருமக்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், வேலூர் மாவட்ட கழகச் செயலாளர் ஏ.பி. நந்தகுமார், வேலூர் மாநகர கழகச் செயலாளர் ப.கார்த்திகேயன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

வேலூரில் நடைபெற்ற கழக முப்பெரும் விழாவில், கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு, வேலூர் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் க.இராஜமார்த்தாண்டன், துணை அமைப்பாளர்கள் என்.பிரகாஷ், வி.எம்.டி.ஏ. பாலாஜி, அர்ச்சனா ப.ச.நவீன் சங்கர், மா.சத்தியமூர்த்தி, ரா. பீடா சரவணன், கே.ராஜ்கமல் ஆகியோர் வெள்ளி வீரவாள் வழங்கி வாழ்த்துப் பெற்றார்கள். கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு, கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின், மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. ஆகியோர் உடன் உள்ளார்கள்.

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் அ.தி.மு.க. - பா.ஜ.வின் நிலை என்ன?

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் கேள்வி!

சென்னை, செப்.19-

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் அ.தி.மு.க., பா.ஜ.வின் நிலை என்ன என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கை வருமாறு:

கடந்த சட்டமன்ற தேர்தலில் கொடுத்த வாக்குறுதிகள் பலவற்றை நிறைவேற்றியுள்ள தமிழ்நாடு அரசு, தற்போது முத்திரை பதிக்கும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை நிறைவேற்றி யுள்ளதை, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தமிழ் நாடு மாநில செயற்குழு பாராட்டி வரவேற்கின்றது.

இத்திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டைச் சேர்ந்த, ஏழை, எளிய, பிற்படுத்தப் பட்ட, மிகவும் பிற்படுத்தப் பட்ட, பட்டியலின மக்கள் உட்பட தகுதி வாய்ந்த ஒரு கோடியே ஆறு லட்சத்து ஐம்பதாயிரம் தாய்மார்களும், சகோதரிகளும் பயன் அடைகின்றனர். பொருளாதார நெருக்கடிகள், ஒன்றிய அரசின் ஒத்துழைப்பு இல்லாமை போன்ற கடும்

நெருக்கடிகளுக்கு மத்தியிலும், தான் கொடுத்திட்ட வாக்குறுதியை நிறைவேற்றிட வேண்டும் என்கிற மன உறுதியுடன் நிறைவேற்றிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை வாழ்த்துகின்றோம்.

தமிழ்நாட்டின் பிரதான எதிர்க்கட்சியான அ.தி.மு.க. இத்திட்டத்தை வரவேற்கிறதா அல்லது எதிர்க்கின்றதா என்பது குறித்து வெளிப்படையாக அறிவிக்க வேண்டும். அதே போன்று ஒன்றியத்தில் ஆளும் கட்சியாக உள்ள பாஜ இத்திட்டம் குறித்து தனது நிலை என்னவென்ப தனையும் பகிரங்கமாக தெரிவிக்க வேண்டும்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.

தமிழ்நாடு – சிங்கப்பூர் நட்புறவுக் கழகத்தின் சார்பில்

சிங்கப்பூர் தந்தை லீ குவான் யூ பிறந்த நாள் விழா!

சுப.வீரபாண்டியன் சிறப்புரை! தஞ்சை.கூத்தரசன் வரவேற்புரை!

சென்னை, செப். 19 -

தமிழ்நாடு - சிங்கப்பூர் நட்புறவுக் கழகத்தின் அமைப்பாளர் தஞ்சை.கூத்தரசன் தனது அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

தமிழகத்திலுள்ள தஞ்சை, திருவாரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, இராமநாதபுரம் மாவட்டங்களிலுள்ள பல நூற்றுக் கணக்கான கிராமங்களிலிருந்து நல்வாழ்வு தேடி சிங்கப்பூருக்கு சென்ற பல்லாயிரக்கணக்கான தமிழர்களை வரவேற்றுப் பணிகளில் அமர்த்தி அரவணைத்த சிங்கப்பூரின் சிற்பி லீ - குவான் யூ அவர்களின் பிறந்த நாள் நன்றிப் பெரு விழா, 21.9.2023 வியாழக் கிழமை மாலை 5 மணியளவில், சென்னை - 4, ஆழ்வார் பேட்டை, சி.ஐ.டி. காலனி 2வது தெருவில் (டி.டி.கே. சாலையில் உள்ள ஓட்டல் இராஜ்பார்க் எதிரில் உள்ள சாலை) அமைந்துள்ள கவிக்கோ அப்துல்ரகுமான் மன்றத்தில் நடைபெறவிருக்கிறது.

அவ்விழாவில், தஞ்சை. கூத்தரசன் வரவேற்புரை யாற்றுகிறார். கவிஞர் கா.முருகையன் தொகுப்புரை நிகழ்த்துகிறார்.

அரிமா முனைவர் நா. சந்திரபாபு தலைமை தாங்குகிறார். அத்திப்பட்டு சாம்ராஜ் தகுதியுரை வாசிக்கிறார்.

சிங்கப்பூர் லீகுவான்-இயுபடத்தினை திறந்து வைத்தும் வாழ்நாள் சாதனையாளர் விருதுக்கான வெள்ளிக் கேடயத்தினை லெ.இரஜினி காந்த் எம்.எல்.ஏ., அவர்களுக்கு வழங்கியும் சுப.வீரபாண்டியன் சிறப்புரை யாற்றுகிறார். தமிழ் நாடு சேம்பர் ஆப் காமர்சின்" தலைவர் சோழ நாச்சியார் இராசசேகர், மாம்பலம் ஆ.சந்திரசேகர், மன்னை.சோம.இளங்கோவன், தேனாம்பேட்டை லயன்ஸ் கிளப் தலைவர் மெ.சண்முகம், தக்கோலம் தேவபாலன், சி.இராசேந்திரன் ஆகியோர் வாழ்த்துரை யாற்றுகின்றனர்.

விழாவுக்கு அனைவரும் வருகை தர வேண்டுகிறேன்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

திருச்சி பால்பண்ணை ரவுண்டானாவில் கழக முதன்மைச் செயலாளர் – அமைச்சர் கே.என்.நேரு, திருச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் – அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் "கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தை கொண்டாடும் விதமாக திருச்சி தெற்கு மாவட்டக் கழகத்தின் சார்பாக மாபெரும் பலூன் பறக்கவிட்டார்கள். உடன் மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி, சட்டமன்ற உறுப்பினர் இனிகோ இருதயராஜ், மாநகர கழகச் செயலாளர் மதிவாணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் சேகரன், அரங்கநாதன், சபியுல்லா, மாநில நிர்வாகிகள் சல்மா, செந்தில், மாவட்ட நிர்வாகிகள் கோவிந்தராஜன், செங்குட்டுவன், லீலாவேலு, மூக்கன், குணசேகரன், பகுதிச் செயலாளர் ஏ.எம்.ஜி. விஜய்குமார் மற்றும் கழக நிர்வாகிகளும், பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று முன்தினம் (17.9.2023) வேலூர் மாநகர், பள்ளிகொண்டாவில் நடைபெற்ற திமுக முப்பெரும் விழாவில், முத்தமிழறிஞர் கலைஞர் அறக்கட்டளை சார்பில் தமிழகத்தில் உள்ள நான்கு மண்டலங்களில் பகுதி, ஒன்றியம், நகரம், பேரூர் ஆகியவற்றில், கழகப் பணியில் சிறப்பாக செயல்பட்டவர்களுக்கு "கழக விருது "க்கான சான்றிதழையும் மற்றும் பொற்கிழியையும் வழங்கினார். இவ்விழாவில், கழக பொதுச் செயலாளரும், நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன், கழகப் பொருளாளரும், நாடாளுமன்ற குழுத் தலைவருமான டி.ஆர். பாலு, கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சருமான கே.என்.நேரு, துணை பொதுச் செயலாளர்கள் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆ.ராசா, அந்தியூர் செல்வராஜ், அமைச்சர் பெருமக்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், வேலூர் மாவட்ட கழகச் செயலாளர் ஏ.பி. நந்தகுமார், வேலூர் மாநகர கழகச் செயலாளர் ப. கார்த்திகேயன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

சனாதனம் நாட்டின் சட்டமானால் இந்தியர்கள் அடிமைகள் ஆவர்!

கர்நாடகா முதல்வர் சித்தராமையா எச்சரிக்கை!

பெங்களூரு, செப்.19-

இந்தியாவின் அரசியலமைப்புச் சட்டத்தை அழித்து விட்டு சனாதன தர்மத்தையே இனி இந்திய அரசியல் சாசனமாக பாஜக நடைமுறைப் படுத்தும்; அப்படி நடைமுறைப்படுத்தினால் 90 சதவிகித இந்தியர்கள் அடிமைகளாக நடத்தப்படுகிற அபாயம் உருவாகும் என கர்நாடகா முதல்வர் சித்தராமையா எச்சரிக்கை மணி அடித்துள்ளார்.

கர்நாடகத்தில் அரசியலமைப்புச் சட்ட முகவுரையை வாசிக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. பெங்களூரு சட்டப் பேரவையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் துணை முதல்வர் டி.கே.சிவகுமார் மற்றும் பள்ளி மாணவர்கள் பெருமளவு பங்கேற்றனர். விதான் சவுதா முன்பாக அனைவரும் அரசியல் சாசனத்தின் முகப்பு பக்கத்தை வாசித்தனர்.

கர்நாடகா முதல்வர் சித்தராமையா உரை யாற்றினார். "போபாலில் பேசிய பிரதமர் மோடி, சனாதன தர்மத்தை ஆதரித்து பேசுகிறார். சனாதன தர்மம்தான் இந்தியாவின் ஒற்றுமைக்கு பலம் என்கிறார். இந்தியாவின் அரசியல் சட்டம் ஒழிக்கப்பட்டு இவர்கள் பேசுகிற சனாதன தர்மம் மனு தர்மம் அமலுக்கு வந்தால் தேசத்தின் 90 சதவிகித மக்கள் அடிமைகளாக்கப்படுவர். இதற்கான சதிகளைத்தான் முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றனர்.

ஜனநாயக கோட்பாடுகள் புத்தர், பசவண்ணர் காலத்தில் இருந்து இந்திய மண்ணில் நிலைபெற்ற ஒன்று. எனவே, அரசியல் சாசனத்துக்கு எதிரான சக்திகளின் சதிகளை இணைந்து முறியடிப்போம்".

இவ்வாறு கர்நாடகா முதல்வர் சித்தராமையா குறிப்பிட்டார்.

டி.கே.எஸ்.இளங்கோவன் – நா.எழிலன் எம்.எல்.ஏ. சிறப்புரை!

நீலகிரி மாவட்டத்தில் கலைஞர் நூற்றாண்டு கருத்தரங்கம்!

மாவட்டக் கழகச் செயலாளர் பா.மு.முபாரக் வேண்டுகோள்!

நீலகிரி, செப். 19 -

நீலகிரி மாவட்டக் கழகச் செயலாளர் பா.மு.முபாரக் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கழக தலைவர், தமிழக முதல்வர் தளபதி அவர்கள் தலைமையில் நடைபெற்ற மாவட்ட கழக செயலாளர்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி, முத்தமிழ் அறிஞர், சமூக நீதி காவலர், நம் இதய தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, தலைவர் கலைஞர் அவர்களின் சிறப்புகளை சாதாரண சாமான்ய மக்களும், கழக நிர்வாகிகள், தொண்டர்களும் அறிந்திடும் வகையில், கவியரங்கம், கருத்தரங்கம், பேச்சு போட்டிகள், கட்டுரை போட்டிகள், கவிதை போட்டிகள், விளையாட்டு போட்டிகள் மாரத்தான் ஓட்டங்கள் நடத்திடவும், மருத்துவ முகாம்கள், இரத்ததான முகாம்கள், நலத்திட்ட உதவிகள் வழங்குதல், ஆதரவற்ற இல்லங்களில் உணவு வழங்குதல் போன்ற மக்கள் பயன்பெறும் நிகழ்ச்சிகள், ஒவ்வொரு மாவட்டத்திலும் கழக கொடியேற்று விழாக்கள் போன்ற நிகழ்ச்சிகளை இந்த ஆண்டு முழுவதும் நடத்துவது என தீர்மானிக்கபட்டு கடந்த ஜூன் 3ம் தேதி முதல் மாவட்டத்தில் கழக கொடியேற்று விழா, நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடந்து வருகிறது, இதன் தொடர்ச்சியாக நீலகிரி மாவட்ட தி.மு.க., சார்பில் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா கருத்தரங்கம் நடைபெற உள்ளது.

அதன்படி, தலைமை கழகத்தின் சார்பில் கழக கொள்கை பரப்பு செயலாளரும், கழக மாநிலங்களவை குழு தலைவருமான திருச்சி.என்.சிவா. அறிவிப்பின்படி, 20.9.2023 புதன்கிழமை சரியாக மதியம் 2 மணியளவில் உதகை ஒய்.எம்.சி.ஏ. ஆனந்தகிரி கூட்ட அரங்கில் கலைஞர் நூற்றாண்டு விழா கருத்தரங்கம் நடைபெற உள்ளது.

கருத்தரங்கத்தில் தலைமை கழகத்தின் சார்பில் பின்வரும் தலைப்புகளில் கழக முன்னணியினர் கருத்துரையாற்ற உள்ளனர்.

முன்னாள் எம்.பி. டி.கே.எஸ்.இளங்கோவன், கலைஞர் ஒரு கருவூலம் எனும் தலைப்பிலும், மருத்துவர் எழிலன் எம்.எல்.ஏ., கலைஞர் ஓர் அறிவாலயம் எனும் தலைப்பிலும், பெருநற்கிள்ளி கலைஞர் ஓர் அறிவகம் எனும் தலைப்பிலும், ஈரோடு சத்தியவதி கலைஞர் ஓர் அன்பகம் எனும் தலைப்பிலும், பொள்ளாச்சி சித்திக் கலைஞர் ஒரு நூலகம் எனும் தலைப்பிலும் உரையாற்றுகின்றனர்.

நம் இதய தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா கருத்தரங்க நிகழ்ச்சி மிக சிறப்புடன் அமைந்திடும் வகையில் மாவட்ட கழக நிர்வாகிகள், மாவட்டத்திலுள்ள தலைமை கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், நகரஒன்றியபேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக முன்னணியினர் உள்ளிட்ட அனைவரும் தவறாது கலந்து சிறப்பித்து கழக தலைவர் மாண்புமிகு தளபதி அவர்களின் வேண்டுகோளை நிறைவேற்றி, தலைவர் கலைஞர் அவர்களுக்கு புகழ் சேர்த்திட உதவிட வேண்டுகிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.

குன்னம் சி.இராஜேந்திரன் – எம்.பிரபாகரன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

பெரம்பலூரில் தந்தை பெரியார் திருவுருவச் சிலைக்கு மரியாதை!

அமைச்சர் சா.சி.சிவசங்கர் தலைமையில் மாலை அணிவித்தனர்!

பெரம்பலூர், செப். 19-

தந்தை பெரியார் அவர்களின் 145வது பிறந்த நாளை முன்னிட்டு பெரம்பலூர் பழைய பேருந்து நிலையம் அருகே உள்ள தந்தை பெரியாரின் சிலைக்கு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் தலைமையில், பெரம்பலூர் மாவட்ட தி.மு.க. சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் பெரம்பலூர் மாவட்டக் கழகச் செயலாளர் செயலாளர் குன்னம் சி.இராஜேந்திரன், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன், மாநில நிர்வாகிகள் பா.துரைசாமி, இரா.ப. ரமேஷ்குமார், டாக்டர் செ.வல்லபன், வி.எஸ்.பெரியசாமி, தலைமை செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர் செ.அண்ணாதுரை,

மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை பாஸ்கர், சன்.சம்பத், ஒன்றிய கழகச் செயலாளர்கள் எம்.ராஜ்குமார், வீ.ஜெகதீசன், எஸ்.நல்லதம்பி,

தி.மதியழகன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஹரிபாஸ்கர்,

ஒன்றிய பெருந்தலைவர்கள் பிரபா செல்லப்பிள்ளை, க.ராமலிங்கம், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் டி.ஆர்.சிவசங்கர் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்

பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களின் 145 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு, சேலம் கிழக்கு மாவட்டம், வீரபாண்டி சட்டமன்றத் தொகுதி, சீரகாபாடி பகுதியில் உள்ள சமத்துவபுரத்தில் நிறுவப்பட்டுள்ள தந்தை பெரியார் அவர்களின் திருவுருவச் சிலைக்கு கழகத் துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி. மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.